இன்றைய அறிமுகம்!
நாளைய நாகரீகம்!!
ஆதிக்க ஆடைகளி
சோபிக்க கோபிராஜ்
கோபிராஜ்
ஆடையகம்
4, சிறப்பு அங்காடி,
யாழ்ப்பாணம்.

பக்கங்கள்: நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

சகல வைபவங்களுக்கு
தேவையான
பட்டுப் புடைவைகள்
மற்றும்
சிறுவர்களுக்கான
தெரிவுகளுக்கு
கோபிராஜ்
ஆடையகம்
4, சிறப்பு அங்காடி,
யாழ்ப்பாணம்.

சுடர் 9 திருவள்ளுவர் ஆண்டு 2025 புரட்டாதி 07 வெள்ளிக்கிழமை (23 – 09 – 1994) UTHAYAN A Lively National Tamil Daily விலை ரூபா 300

# மாட்டு வண்டியில் சென்ற புலிகள் தாக்கி 3 படையினர் உயிரிழப்பு

## திருமலையில் நடந்த கொமாண்டோ அதிரடி தாக்குதல்

யாழ்ப்பாணம், செப். 23

திருகோணமலையில் விடுதலைப் புலிகள் மாட்டு வண்டியில் சென்று நடத்திய கொமாண்டோ தாக்குதலில் மூன்று ஸ்ரீலங்கா இராணுவத்தினர் கொல்லப்பட்டனர்.

நேற்று முன்தினம் மதியம் பன்னிரண்டு குடியிருப்பு இராணுவ முகாம் இராணுவத்தினர் மக்களை சோதனை செய்வதற்காக முகாமில் இருந்து முன் நூறு யார் தொலைவில் வந்து நிற்கும்போது விடுதலைப் புலிகள் மாட்டு வண்டியில் சென்று இத்தாக்குதலை நடத்தினர்.

5 நிமிடம் நடத்தப்பட்ட இந்த கொமாண்டோ தாக்குதலில் 3 ஸ்ரீலங்கா இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். ஏனையோர் தப்பி ஓடிவிட்டனர்.

முட்புதர் எதுமிகுதி விடுதலைப் புலிகள் நடத்திய இந்த வெற்றிகரத் தாக்குதலில் ரி. 81 ரகத் துப்பாக்கி ஒன்றும், ரி 56 – ரகத் துப்பாக்கிகள் இரண்டும், ரி 81 ரக மகசீன்கள் நான்கும், ரி 56 ரக மகசீன்கள் நான்கும், நடுத்தர ரவைகள் 390 உம், ஏ.கே ரவைக் கூடு தாங்கி அணிகள் இரண்டும், என். 75 ரக குண்டு கள் இரண்டும் இராணுவத்தினரிடம் இருந்து கைப்பற்றப்பட்டன. (ஒ-3)

# புலிகளுடன் பேச்சு நடத்த நால்வர் கொண்ட அரச குழு

## அடுத்த வாரம் யாழ் செல்லலாம்

கொழும்பு, செப். 23

விடுதலைப் புலிகளுடன் சமாதானப் பேச்சுவார்த்தைகளை நடத்துவதற்காக அரசாங்கத் தரப்பில் நான்கு பிரதிநிதிகள் நியமிக்கப்படுவர்.

அது தொடர்பான நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டு வருகிறது.

அரச பிரதிநிதிகளின் பெயர் விவரங்கள் விரைவில் விடுதலைப்புலிகளுக்கு அனுப்பி வைக்கப்படும்.

இத்தகவல்களை தகவல்துறை அமைச்சர் தர்மசிறி சேனநாயக்கா நேற்றைய செய்தியாளர் மாநாட்டில் வெளியிட்டார்.

இதேவேளை அரசாங்கப் பிரதிநிதிகள் அடங்கிய தூதுக்குழு அனேகமாக அடுத்த வாரம் யாழ்ப்பாணம் செல்லும் என்று அரசியல் வட்டாரங்களை மேற்கோள் காட்டி பி.பி.சி. தெரிவித்தது. (அ-3)

# படையினர் உஷார்

கொழும்பு, செப். 23

கிழக்கிலும், மேற்கிலும் உள்ள அரசாங்கத் துருப்புக்கள் உஷார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன.

அரசாங்க வட்டாரங்களை மேற்கோள் காட்டி பி.பி.சி மேற்கண்டவாறு தெரிவித்தது.

படையினர் விழிப்பாக இருப்பார்கள் என்று தகவல் துறை அமைச்சர் தர்மசிறி சேனநாயக்கா நேற்று நடந்த செய்தியாளர் மாநாட்டில் தெரிவித்தார். (இ-3)

# ஒய்வூதிய வவுச்சர்கள் வந்து சேர்ந்தன

யாழ்ப்பாணம், செப். 23

யாழ், மாவட்ட ஒய்வூதியர்களின் செம்ரெம்பர் மாதத்திற்குரிய ஒய்வூதிய வவுச்சர்களும், ஒரு தொகுதி தேசிய ஆடையான ஆடைகளும் நேற்று யாழ் செயலகத்திற்கு கொண்டு வந்து சேர்க்கப்பட்டன. (ஒ-100)

## எத்தகைய தடை வரினும்

# சமாதானத் தீர்வுக்கான முயற்சியை அரசு இடைநடுவில் கைவிடாது

## அமைச்சர் தர்மசிறி தகவல்

கொழும்பு, செப்ரெம்பர் 23

எத்தகைய தடை ஏற்படினும், இனப்பிரச்சினைக்கு, சமாதானத் தீர்வு காணும் முயற்சியை அரசாங்கம் ஒருபோதும் இடைநடுவில் கைவிடாது.

சமாதான முயற்சியை மேற்கொள்வதில் அரசு மிக உறுதியாக உள்ளது. விடுதலைப் புலிகள் ஆயுதப்படையினர் மீதான தாக்குதல்களை அதிகரித்திருப்பினும், சமாதான முயற்சியைக் கைவிடுவதற்கு அரசாங்கம் தயாரில்லை.

இவ்வாறு தகவல்துறை அமைச்சர் திரு. தர்மசிறி சேனநாயக்கா அமைச்சரவைக் கூட்டத்தின் பின்னர் நேற்று நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் தெரிவித்தார்.

அமைச்சரவையின் பின்னர் நடக்கும் வாராந்த செய்தியாளர் மாநாடு நேற்று நடைபெற்றது.

விடுதலைப் புலிகள் கதிர்காமத்தில் நடத்திய கடற்படைக் கப்பல் "சாகரவர்த்தனா" மீதான தாக்குதல் குறித்து செய்தியாளர்கள் பலரும் கேள்வி எழுப்பினர்.

இத்தகைய பாரிய தாக்குதலின் பின்னர், அரசாங்கத்தின் [4 ஆம் பக்கம் பார்க்க]

## கடற்படையினர் தாக்கு; மீனவரைக் காணவில்லை

### வள்ளம் முற்றுகிப்பு; மூவர் தப்பினர்

குருநகர், செப் 23

பூநகரி காஞ்சி காக்குப் பகுதி கடலில் மீன் பிடித்துக் கொண்டிருந்த மீனவர்கள் மீது கடற்படையினர் நேற்று அதிகாலை ஒரு மணியளவில் வேட்டுக்களைத் தீர்த்தனர்.

இச் சம்பவத்திற்கோது ஒரு வள்ளத்தில் சென்றிருந்த நால்வரில் மூவர் கடலில் குதித்து நீந்தி கரை சேர்ந்தனர். ஒருவர் நேற்று மாலை வரை கரை திரும்பவில்லை. இவர் படையினரின் வேட்டுக்கு இலக்காகி இருக்கலாம் என்று சந்தேகப்படுகிறது.

ஒருவர் மத்தியகிழக்கு விநியைச் சேர்ந்த யோசெப் பெரியராக [50 வயது] என்ற குடும்பஸ்தரே கடலில் காணாமற் போனவர் ஆவார்.

இவர்கள் சென்ற வள்ளத்தை படையினர் தாக்கி மூழ்கடித்து விட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஒ-51)

## மோதலால் நேரு சுடப்பட்டு காயம்

ஜனாதிபதி சட்டத்தரணி மோதினால் நேரு துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் கொழும்பு பெரியாஸ்பத்திரியில் நேற்று முன்தினம் அனுமதிக்கப்பட்டார்.

சம்பவப்பிடிப் பொலீஸார் இதனைத் தெரிவித்தனர். இவரை சுட்டவர்கள் யார், சம்பவம் எங்கு நடந்தது போன்ற விவரங்கள் வெளியாகவில்லை.

முன்னாள் தமிழ்த் காங்கிரஸ் பிரமுகராக மோதினால் நேரு பொதுத் தேர்தலுக்கு முன்னர் ஐ.தே கவில் சேர்ந்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. [ஒ-எ-6]

## வீ.ஏ. கந்தையாவின் மகள் கொலையில் மூவர் கைது!

கொல்லப்பட்டியில் மாடிவீடொன்றில் 52 வயதான தமிழ்ப்பெண் ஞானேஸ்வரி கந்தையா குத்திக் கொலை செய்யப்பட்டது தொடர்பாக ஒரு பெண் உட்பட மூன்று பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

இவர்கள் புலனாய்வாளர்களுக்கு கூட்டுத்தகவல்பட்டுள்ளவர்;

கொலை செய்யப்பட்ட ஞானேஸ்வரி கந்தையா, ஊர்காவற்றுறை முன்னாள் எம்.பி. வீ.ஏ. கந்தையாவின் மகள் என்பது குறிப்பிடத்தக்கது (ஒ எ-6)

## பெனாஸிரின் விசேட தூதர் சந்திரிகாவுடன் பேச்சு

கொழும்பு, செப் 23

பாகிஸ்தான் பிரதமர் பெனாஸிர் பூட்டோவின் விசேட தூதர் செனெட்டர் மாலிக் ஜஸ்வர் நேற்று கொழும்பில் பிரதமர் சந்திரிகா குமாரதுங்காவைச் சந்தித்தார்.

பெனாஸிரின் தனிப்பட்ட எழுதும் ஒன்றை அவர் சந்திரிகாவிடம் கையளித்தார்.

பொருளாதார, வர்த்தக விவகாரங்கள், பாதுகாப்பு ஒத்துழைப்பு ஆகிய விடயங்கள் குறித்து பிரதமரும் பாகிஸ்தானின் விசேட தூதரும் கலந்துரையாடினார்கள்.

சிம்லா உடன்படிக்கையின்படி காஷ்மீர்ப் பிரச்சினைக்கு பாகிஸ்தானும் இந்தியாவும் தீர்வு காணவேண்டும் என்ற இலங்கையின் தொடர்ச்சியான நிலைப்பாட்டை பிரதமர் சந்திரிகா பாகிஸ்தான் தூதரிடம் வலியுறுத்தினார்.

பாகிஸ்தானுக்கு விஜயம் செய்யும்படி பெனாஸிர் பூட்டோ விடுத்த அழைப்பை சந்திரிகா ஏற்றுக்கொண்டார்.

## பிரபாவுடன் ரகசிய பேச்சு எதுவுமில்லை

### நாடாளுமன்றில் அறிவிப்பு

கொழும்பு செப். 2

விடுதலைப் புலிகள் தலைவர் பிரபாகரனோடு எதுவித ரகசிய பேச்சுவார்த்தைகளும் அரசாங்கத்துக்கு கிடையாது. எதையும் வெளிப்படையாகவே அரசாங்கம் செய்யும்.

நல்லெண்ண நோக்கோடு எதுவித நிபந்தனையுமின்றி பிரபாகரனை விரும்பி அழைக்க வசமிருந்து 10 பொலீஸரை விடுவித்தார். இது அரசாங்கத்தின் வேண்டுகோள் அல்ல

[4ஆம் பக்கம் பார்க்க]

## ஜனாதிபதி தேர்தலில் ஒஸி போட்டியிடார்

### காமினிக்கு ஆதரவு

ஜனாதிபதி தேர்தலில் ஐ.தே.க. வேட்பாளர் காமினி திஸநாயக்காவை ஆதரிக்கப் போவதாக ஸ்ரீலங்கா மக்கள் கட்சியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான ஒஸி அபேகுணசேகர அறிவித்துள்ளார்.

ஜனாதிபதி தேர்தல் பிரசார மேடைகளில் பிரேமதாஸாவின் உருவப்படம் ஒன்றை வைத்தால் வாக்குகள் கூடுதலாக கிடைக்கும் என்றும் அவர் தெரிவித்தார்.

எடுத்த பொதுத் தேர்தலில் ஐ.தே.க. தோல்வியடைந்தமைக்கு ஐ.தே.க. தலைவர்களே காரணம் மக்கள் அல்ல என்றும் அவர் கூறினார். [இ-3]

## கற்குளத்தில் படையினர் சூடு 3தமிழர் பலி; 7 பேர் காயம

கொழும்பு, செப். 23

வவுனியா நெடுங்கேணி—கற்குளம் பகுதியில் பதுங்கியிருந்த படையினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூடில் தமிழர்கள் மூவர் பலியானார்கள் எழுவர் காயமடைந்தனர்.

நெடுங்கேணி- [illegible] வீதியில் கற்குளம் என்னும் இடத்தில் கடந்த வெள்ளிக்கிழமை இச்சம்பவம் இடம் பெற்றது.

காட்டுப்பகுதியில் நாவல் பழம் பறித்துக்கொண்டிருந்த பொது மக்கள் மீது படையினர் திடீரென்று சுடத்தொடங்கினர். [illegible] ஏற்கனவே [illegible] பகுதியில் [illegible] (ஒ-3)

## அரசமைப்புக் திருத்தம் பற்றி ஆராயும்

# தெரிவுக்குழுவின் தலைவராக அமைச்சர் பீரிஸ் நியமனம்

## ரணில், காமினி, தொண்டா, கதிர்காமர் உட்பட 17 பேர் அங்கம்

கொழும்பு, செப். 23

தற்போதைய அரசமைப்பு முறையை மறுபரிசீலனை செய்வதற்காக அமைக்கப்பட்டுள்ள நாடாளுமன்றத் தெரிவுக் குழுவுக்கு நீதி மற்றும் அரசமைப்பு அமைச்சர் பேராசிரியர் ஜி. எல். பீரிஸ் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.

தெரிவுக் குழுவில் இடம் பெறும் ஏனைய உறுப்பினர்களின் விபரம் வருமாறு:

அமைச்சர்கள் லக்ஷ்மன் கதிர்காமர், இந்திரகுமார் வர்ணதுங்க, லக்ஷ்மன் ஜெயக்கொடி, நிமல் சிறிபால

[4ஆம் பக்கம் பார்க்க]

## தொண்டர் நிறுவன பிரதிநிதிகள் 23 பேர் யாழ் வருகின்றனர்

யாழ்ப்பாணம், செப் 23

யாழ் மாவட்ட அபிவிருத்தி மற்றும் புனரமைப்பு திட்டங்கள் குறித்து ஆராய்வதற்காக 15 அரசசார்பற்ற தொண்டர் அமைப்புக்களைச் சேர்ந்த 23 பிரதிநிதிகள் எதிர்வரும் முதலாம் திகதி யாழ்ப்பாணம் வரவிருக்கின்றனர்.

கொழும்பில் இருந்து திருகோணமலைக்கு வந்து அங்கிருந்து "பினாம்பயல்" கப்பலை விசேடமாக அமர்த்தி அதில் அவர்கள் பருத்தித்துறைக்கு வருவர் எனத் தெரிவிக்கப்பட்டது; [4 ஆம் பக்கம் பார்க்க]

## தியாகி திலீபனுக்கு குடாநாடு எழுச்சியுடன் அஞ்சலி

# 8 ஆவது நாளான நேற்று உண்ணாவிரதம், ஊர்தி பவனி

யாழ்ப்பாணம், செப். 23

தியாகி திலீபனின் நினைவு தினம் நேற்று எட்டாவது நாளாக குடாநாடு பூராவும் சிறப்பாக அனுஷ்டிக்கப்பட்டது.

பல்வேறு இடங்களிலும் உண்ணாவிரதங்களும் சிரமதானப் பணிகளும் மேற்கொள்ளப்பட்டன. சைக்கிள் ஊர்வலமாக மாணவர்களும் உண்ணாவிரதத்திற் கலந்து கொண்டு கூட்டங்களையும் கலைநிகழ்ச்சிகளையும் நடத்தி தியாகி திலீபனை நினைவு கூர்ந்தார்கள்.

வீதிகளில் செல்லும் வாகனங்களில் திலீபனின் படத்துடன் கூடிய மஞ்சள் கொடிகள் பறக்கவிடப்பட்டிருந்தன. [4 ஆம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

நடுப்பு ஊசி ஏற்றப்பட்ட நல்ல இன கோழிக்குஞ்சுகள், அடை முட்டைகள் விற்பனைக்கு உண்டு. செல். பூப் மோட்டோர்ஸ், 882, மணிக் கூடு வீதி, யாழ்ப்பாணம், வெலிங்டன் சந்தியடி. (32984)

புதுரக (Latest) கடிகாரங்கள் London Boy, Casio, Citizen விற்பனைக்குண்டு. சகல மணிக்கூடுகளும் உத்தரவாதத்துடன் திருத்தி கொடுக்கப்படும். கஜன்ஸ் வாச் வேர்ஸ், 12, புகையிரத நிலைய வீதி, கல்லாரம். [7647]

ஹல்டா (Halda) தமிழ் நட்டர்சு இயந்திரம் விற்பனைக்குண்டு. தொடர்பு: 140, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். [7927]

5850 சதுரஅடி நகரநில அளவுள்ள பாரிய வைத்தொழில் நிறுவனத்திற்கு ஏற்ற கட்டடம் காங்கேசன் துறை பிரதான வீதியில் மருதனார்மடம் சந்திக்கு அருகில் விற்பனைக்குண்டு. தரகர் தேவையில்லை. தொடர்பு: செ. பொன்னம்பலம், இணுவில், கல்லாரம். (33019)

நீரிழிவு நோயாளிகள் பாவிக்கக் கூடிய ஆட்டமா, குரக்கன் மா, ஓடியல் மா, உழுந்து மா எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம். அன்னா தொழிலகம், இணுவில். (சி-9195)

### கோழிக்குஞ்சு விற்பனை

Prima Broiler குஞ்சுகள் 24-9-94 சனிக்கிழமை பெற்றுக்கொள்ளலாம். உடன் பதிவுசெய்யவும். நல்லூர் வீடியோ சென்டர், 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (33022)

### புறொயிலர் குஞ்சுகள்

பத்து நாட்கள் வளர்ச்சியடைந்த பிறிமா புறொயிலர் குஞ்சுகள் விற்பனைக்குண்டு. சி. குலசிங்கம், இல. 9, நக்கீரா வீதி (Barக்கு முன்பாக), யாழ்ப்பாணம் (32992)

### தேவை

அனுபவமும், நிறமையும் உள்ள விற்பனையாளரும், உதவியாளர்களும் தேவை; உதவியாளர் வயதில் குறைந்தவர்கள் விரும்பத்தக்கது. நேரில் தொடர்புகொள்ளவும். யாழ். நகர்வோர் காட்சியகம், இல. 441 காங்கேசன்துறை வீதி [சிவன் கோயிலடி வடக்கு வீதி], யாழ்ப்பாணம். [32965]

தமிழில் பில் எழுதி புடவை வியாபாரம் செய்யக்கூடிய பெண்பிள்ளை ஒருவர் தேவை. நேரில் வரவும். த. சங்கரப்பிள்ளை அன்சன்ஸ், இல 81, மக்கள் நவீன சந்தை, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். (32975)

நடன முருகன் வைத்திய நிலையத்தில் தாதியாக கடமையாற்றக்கூடிய பெண்பிள்ளை தேவை. யாழ். நகர எல்லைக்கு உட்பட்டவர்கள் விரும்பத்தக்கது. தொடர்புகளுக்கு: நடன முருகன் வைத்திய நிலையம், சந்திரச் சந்தி, யாழ்ப்பாணம். (32997)

### வெளிவந்து விட்டது

அ. பொ. செல்லையா அவர்களால் எழுதப்பட்ட "கல்விபற்றிச் சிந்திப்போம்—செயற்படுவோம்" வெளிவந்துவிட்டது. அதிபர்களுக்கு ஓர் அகவிளக்கு! பெற்றார்களுக்கு ஒருகலங்கரைவிளக்கு! விலை 25/-. எல்லா புத்தகசாலைகளிலும் விற்பனையாகின்றது. (33021)

### அளவையியல்

விஞ்ஞான முறையியல் புதிய பாடத்திட்டத்துக்கு அமைந்தது ஆக்கம்: S சத்திரராஜா. விற்பனையாகிறது பூபாலசிங்கம் புத்தக நிலையம், யாழ்ப்பாணம். [சி-9157]

### பூச்சிகளிகாலி

பூச்சிக்கொல்லி [இன்செக்டிசைட்] மலத்தீவிலும் சிறந்தது. கறையான், எறும்பு, கொறவன் போன்ற சகல பூச்சிகளையும் கட்டுப்படுத்த சிறந்தது. கண்ணன்கேதை, மக்கள்வங்கி முன்பாக, ஸ்ரான்லி வீதி யாழ்ப்பாணம். [சி-9148]

### புகைப்பட கருவி திருத்தம்

அதிவிசேட முறையில் வீடியோ விடிக் சகல வித கெமராக்கள் பிளாஸ்கள் மற்றும் உபகரணங்கள் திருத்தச் சிறந்த இடம் ரகு மோட்டோர் டெக்னிக், மேல் மாடி, 501, கஸ்தூரியார் வீதி, லெப். கேணல் சந்தோசம் வீதி, கல்லாதிட்டி சந்திக்கு அருகில், யாழ்ப்பாணம். (33005)

### வகுப்புகள்

Yogi Home, Science Academy கேக் ஐசிங், மாச்சிவி மலர்கள் (Sugar Craft) மேலைத்தேய ஐசிங் (Fondant Icing), சமையற்கலை, ஒப்பனைக் கலையும், தலை அலங்காரமும் புதிய வகுப்புகள் ஆரம்பமாகி உள்ளன. சேர விரும்புவோர் தொடர்பு கொள்ளவும்: இல. 71B, நாயன்மார் வீதி, கச்சேரி நல்லூர் றோட், நல்லூர். (32996)

## தனியார் தொழிற்பயிற்சிக் கல்லூரிகளின் ஒன்றியம்

யாழ். மாவட்டம்

மேற்படி ஒன்றியத்தில் பதிவு செய்யாத கணனி தட்டெழுத்து, சுருக்கெழுத்து, தாதிகள் பயிற்சி, மனையியல் CTMA, AAT, IAB தொழில் பயிற்சி நிலையங்கள்

27-09-94 இலிருந்து 10 - 10 - 94க்குள் மருத்துவமனை வீதியில் உள்ள

வடஇலங்கை தொழில் நுட்ப கல்லூரியில்

தம்மை பதிவு செய்து கொள்ளும்படி கேட்கப்படுகிறீர்கள்.

இக்கால எல்லைக்குள் பதிவு செய்யப்படாத நிலையங்கள் மேற்கொண்டு வகுப்புகள் நடத்த அனுமதிக்கப்படமாட்டார்கள்.

செயலாளர்,
தனியார் தொழிற் பயிற்சி கல்லூரிகளின் - ஒன்றியம்.

(சி-9216)

## 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு: 28 — 10 — 1968

உதிர்வு: 23 — 09 — 1992

செல்வன்
**யூட் ஜெயராபன் மேரி யோசவ்**
(சிக்லாலை)

ஆண்டிரண்டு ஆனாலும் எம் நெஞ்சில்
அழியாது எம்மவனே உன் உருவம்
எம் பலமாய் எம் துணையாய் என்றுமே
நீ இருப்பாய் எமக்கென்ன என்றிருந்தோம்
எம் கனவு கணப்பொழுதில் பகற் கனவாய்
ஆகுமென ஆர் நினைத்தார் அப்பொழுது
ஏங்குகின்றோம் துடிக்கின்றோம் யாரறிவார்
ஆறிடுமோ எம் நெஞ்சம் இறையடியில்
நாமெல்லாம் இணையும்வரை மறுபடியும்

இவரின் ஆன்ம இளைப்பாறுதிநிமித்தம் இன்று 23 - 09 - 1994 காலை 6 00 மணிக்கு யாழ் ஆயர் மாளிகையிலும் 6-15 மணிக்கு கொழும்புத்துறை முதியோர் இல்லத்திலும் நாளை 5-30 மணிக்கு மரியன்னை பேராலயத்திலும் இரங்கற் திருப்பலிகள் ஒப்புக்கொடுக்கப்படும்.

உமது பிரியம் துயருறும்!
பெற்றோர், சகோதர, சகோதரிகள், உறவினர்.

17, பிறவுன் வீதி,
யாழ்ப்பாணம். [33017]

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தாயின் மடியில்: 03 — 02 — 1955

இறைவன் அடியில்: 04 — 10 — 1993

**அமரர் நடராசா ஸ்ரீதரன்**
(யா. ம. நோ. கூ சங்கம்)

திதி: 23 - 09 - 1994

தன்பத்தை உணராமலே இன்பமாக - வாழ்ந்திருந்தோம்
மின்னாமல் முழங்காமல் விழுந்ததே இடி எம்மீது
ஓராண்டு சென்றும் ஆறவில்லை எம்துயரம்
இவ்வயதில் நீர்மறைந்தது விதியா அல்லது சதியா
ஈராறு மாதம் ஓடோடி மறந்தாலும் - எங்கள்
இதயங்களில் எப்போதும் நிலைத்து நிற்கிறீர்கள்.

உங்கள் ஆத்மா இறைவனடிசேர
என்றென்றும் பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் பிரியம் தவிக்கும்;
அன்பு மனைவி,
உறவினர்கள்

21/3 இராமலிங்கம் வீதி,
திருநெல்வேலி மேற்கு,
யாழ்ப்பாணம். [33016]

## அறிவித்தல்

**காங்கேசன் சிமெந்து பொதுத் தொழிலாளர் சங்கம்**

எம்மண்ணின் மலர்விற்காக
உண்ணாநோன்பிருந்து ஈகச்சாவடைந்த

**லெப். கேணல் தியாகி திலீபன்**

அவர்களின் 7ஆம் ஆண்டு அகவணக்க உண்ணாவிரதம் 24 09-1994 ஆம் திகதி சனிக்கிழமை காலை 8-30 மணிக்கு சுன்னாகம் சிறிமவைச் சிவன் கோயில் முன்றலில் நடைபெறும்.

எமது காங்கேசன் சிமெந்து தொழிற்சாலை ஊழியர்களையும் கலந்து கொள்ளுமாறு அழைக்கின்றோம்.

கா. சி. பொ. தொ. சங்கம்

(7650)

## யாழ். அமெச்சூர் மெய்வல்லுனர் சங்கம்

## மாபெரும் அஞ்சலோட்ட விழா

யாழ்ப்பாண அமெச்சூர் மெய்வல்லுனர் சங்கத்தினால் யாழ்ப்பாணத்தில் முதன்முறையாக கழகங்கள் (ஆண், பெண்) பாடசாலைகள் (மாணவ, மாணவிகள்) க்கு இடையேயான ஒரு மாபெரும் அஞ்சலோட்டப் போட்டி நவம்பர் மாதம் 5ஆம், 6ஆம் திகதிகளில் யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் நடத்தப்பட உள்ளது. யாழ். மாவட்டத்திலுள்ள தலைசிறந்த ஓட்ட வீரர்கள், வீராங்கனைகள், மாணவ, மாணவிகள் இப்போட்டியில் பங்கு பற்ற உள்ளார்கள். விண்ணப்பப் படிவங்கள் சங்கத்தின் காரியதரிசியிடம் பெற்றுக் கொள்ளலாம். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் ஒக்டோபர் மாதம் 20ஆம் திகதிக்கு முன்னர் காரியதரிசிக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

திரு. V. T. சிவலிங்கம்,
காரியதரிசி,
யாழ். அமெச்சூர் மெய்வல்லுனர் சங்கம்.
மேலும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம்,
யாழ்ப்பாணம்.

(33027)

## தனியார் கல்வி நிறுவன ஒன்றியம்

பண்டத்தரிப்புக் கோட்டம்
நடத்தும்

**லெப் கேணல் திலீபனின்**

## நினைவு நாள் விழா

இடம்: சுழிபுரம் வழக்கம்பரை அம்மன் ஆலய முன்றில்

காலம்: 23 – 09 – 1994 வெள்ளி பிற்பகல் 4 30 மணி

நிகழ்ச்சி நிரல்:

1. ஈகைச்சுடர் ஏற்றல்
2. தியாகி திலீபனின் திருவுருவப் படத்திற்கு மலர் மாலை அணிதல்
3. நினைவுப் பேருரைகள் (விடுதலைப் புலிகளின் முக்கிய பிரமுகர்கள்)
4. பட்டி மண்டபம்:
   தியாகி திலீபனின் தியாகத்தால் மக்கள் முழுமையாக
   விழிப்புணர்ச்சி அடைந்தார்களா?
   விழிப்புணர்ச்சி அடையவில்லையா?
   ★ விழிப்புணர்ச்சி அடைந்தார்கள்
   திரு. பாலா
   திரு. புவனேந்திரன்
   திரு விஜயேந்திரன்
   ★ விழிப்புணர்ச்சி அடையவில்லை
   திரு மகேந்திரன்
   திரு. காசர், எஸ் கெனிகா
   திரு பிரதீபன்
   நடுவர்: திரு. குமாரவேலு [ஆசிரியர்]
5. நடன நிகழ்வுகள்
6. நாடகம்:
   "அம்மா நான் போராடப் போகிறேன்"
   (க. பொ. த. உயர்தர மாணவிகள்)
7. புரட்சி கானங்கள்:
   (பிரபல இசைக்குழுப் பாடகருடன், மாணவ மாணவிகள்)

அனைவரையும் இந்நிகழ்வில் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

குறிப்பு:
நிர்வாகிகள், ஆசிரியர்கள், மாணவர்கள் இந்நிகழ்வில் கலந்து கொள்வதுடன், 24-09-1994 சனியன்று வழக்கம்பரை ஆலய முன்றலில் நடைபெறும் தியாகி திலீபனின் அடையாள உண்ணாவிரதத்தில் கலந்து கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

வெள்ளி மாலையும், சனி முழுநாளும் விடுமுறை நாளாகும்.

தனியார் கல்வி நிறுவன ஒன்றியம்,
பண்டத்தரிப்புக் கோட்டம்.

(சி-9351)

## பிறந்தநாள் அழைப்பு

**23 - 09 - 94** (வெள்ளி)

கோண்டாவிலை வசிப்பிடமாகக் கொண்ட
திரு. திருமதி உதயன் தம்பதிகளின்
செல்வப் புதல்வன்

**செல்வன் U. உதயஷாரா**
(லக்ஷன்)

தனது இரண்டாவது பிறந்தநாளை இன்று 23 - 09 - 94 சிறப்பாக கொண்டாடுகின்றார் இவ் அழைப்பை

உற்றார், உறவினர்கள், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு மிகவும் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றோம். தனிப்பட்ட அழைப்பிதழ்கள் அழைக்கப்படாததால் இவ் அழைப்பினை அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

இங்ஙனம்
திரு. திருமதி உதயன்
குடும்பத்தினர்
(பொருளியல் ஆசிரியர்)

கோண்டாவில் மேற்கு.

(சி-9354)

## NEW MASTER INSTITUTE

B. M. C. LANE, JAFFNA.

**DAY CLASSES**

பகல் நேர விஞ்ஞான வகுப்புகள்

(94 A/L) பரீட்சை எடுத்த மாணவர்களுக்கானது

ஆரம்பம்: **29-09-1994** வியாழன்
நேரம்: 8-00 — 2-00

விபரங்கள் காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளவும்.

(சி-9193)

## A/L 95 DAY CLASSES

(பகல் நேர வகுப்புக்கள்)

கலை - வர்த்தக பிரிவுக்கு உரிய சகல பாடங்களும்

ஆரம்பம்: 27 - 09 - 94
செவ்வாய் காலை 8 மணி

## புதிய உயர் கல்லூரி

(New College of High Studies)
ஆரியகுளம் சந்தி யாழ்ப்பாணம்

[சி-9353]

## 45 ஆம் நாள் நினைவலைகள்

எமது கல்லூரியின் விவசாய விஞ்ஞானத்துறை ஆசிரியை செல்வி. கணேஸ்வரி தம்பிஐயா அவர்களின் அன்புச் சகோதரன்

**செல்வன் தம்பிஐயா ரவிச்சந்திரன்**
(ராசன்)

10-08-94 அன்று பிரான்சில் அகால மரணமானார்; பாரில் பல்லாண்டு வாழவேண்டிய இளந்தளிர் நீக்கி ஆழ்ந்த அகால மரணமானதை அடுத்து எமது இதய பூர்வமான கண்ணீர் அஞ்சலியைச் செலுத்தி, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள்
இராமநாதன் கல்லூரி,

(சி/5722)

## 3ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு: 08 — 10 — 1928

உதிர்வு: 24 — 09 — 1989

**முடியப்பு அந்தோனிப்பிள்ளை**
(மயிலிட்டி)

காதலித்துக் கைப்பிடித்த காரிகையாள் கண்களிக்க, செல்லமாய் நீர்வளர்த்த சேயர்கள் சோர்வடைய, பேரன்புமிக்க உம் பேரர்கள் பேதலிக்க, விண்ணகம்நோக்கி விரைந்த எம் வேந்தனே உம் ஆன்மா சாந்திபெற அமலனை வேண்டுகின்றோம்.

அன்னாரின் ஆத்மசாந்திக்காக 24 - 09 - 1994 பிற்பகல் 5. 00 மணிக்கு பருத்தித்துறை லூர்துமாதா ஆலயத்தில் இரங்கற் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்

3ஆம் குறுக்குத்தெரு,
பருத்தித்துறை. (33030)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
292/2 நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

## தடுப்பது கடினம்

ஸ்ரீலங்காவின் புதிய ஜனாதிபதியைத் தெரிவு செய்வதற்கான தேர்தல் நவம்பர் மாதத்தில் நடைபெறப் போகிறது. இப்போது பதவியில் உள்ள டி. பி. விஜேதுங்கா விரும்பினால் டிசம்பர் 5வரை இம்மாசனத்தில் ஒட்டிக் கொண்டிருக்கலாம்.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதில்லை என்று விஜேதுங்கா வெற்றிகரமாகப் பின்வாங்கிக் கொண்டார். ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் பதவியிலிருந்தும் நீங்கி விட்டார். அதனால், தேர்தல் நடைபெறும் வரையான இடைக்காலத்தில் சந்திரிகா அரசுக்குத் தொல்லையாக, உபத்திரவமாக இருக்கமாட்டார் என்றே அவதானிகள் பலரும் எதிர்பார்த்தனர்.

சந்திரிகா அரசு புதிய விச்சுடன் மேற்கொள்ளும் நடவடிக்கைகளுக்கு முட்டுக்கட்டையாக இல்லாமல் விஜேதுங்கா ஒத்தோடுவார், இசைந்து, இணைந்து, இணங்கிச் செயற்படுவார் என்று பலரும் நம்பினர். ஆனால் அவர் தனக்குள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தி சந்திரிகாவின் செயற்பாடுகளுக்கு முட்டுக்கட்டை போடுவதில் மிகத் தீவிரமாக முனைந்துள்ளார் என்பது இப்போது தெரிகிறது.

அவரது இந்தச் செயற்பாட்டில் இரண்டு தோக்கங்கள் உள்ளன. ஜனாதிபதி தேர்தலுக்கு முன்னர் சந்திரிகா தனது செல்வாக்கை அதிகரித்துக் கொள்ளாமல் தடுப்பது ஒன்று. அதாவது மக்கள் மனங்களை வெல்லக் கூடிய, அவர்களுக்கு பயன் தரக் கூடிய திட்டங்களை சந்திரிகா அரசு நடை முறைப் படுத்தவிடாமல் ஒத்தடம் விளைப்பது. அதற்காக தனக்குள்ள அதிகாரங்களை பயன்படுத்துவது என்பதே அதாவாகும்.

ஐக்கிய தேசியக் கட்சி ஆசாங்கத்தில் சீர்கேடுகள், தஞ்சிரமோசடிகள், ஊழல்களை அம்பலப்படுத்தி, ஐ. தே. க. அரசியல் வாதிகளின் நடத்தை கெட்ட தன்மையை மக்களுக்குத் தெரியப்படுத்தும் புதிய அரசின் முயற்சிகளைத் தடுத்துவிடுவது இரண்டாவது. அதனை அனுமதித்தால் ஐக்கிய தேசியக் கட்சியின் செல்வாக்கு மேலும் சரியும்; ஜனாதிபதித் தேர்தலில் கட்சிக்கு மேலும் ஆழமான படுபாதாளத்தில் விழுந்து போக நேர்கிடலாம். இத்தகைய ஒரு நிலை வராமல் தடுப்பதற்காக, சந்திரிகா அரசுக்குப் பல தடைக் கற்களைப் போட விஜேதுங்கா முடிவு செய்திருப்பதாக ஊகிக்க முடிகிறது.

அவர் அரசியலில் இருந்து ஒதுங்கியிருப்பார் இல்லையோ இருபது மாத காலத்துக்கு அவர், சர்வ அதிகாரமும் உள்ள, சகல வல்லமையும் கொண்ட நிறைவேற்று ஜனாதிபதியாக கிம்மாசனத்தில் வீற்றிருக்க உதவியது ஐக்கிய தேசியக் கட்சியே. இந்த அரசியல் கலாசாரம் அவருக்கு விபத்தாகக் கிடைத்ததெனினும், ஐக்கிய தேசியக் கட்சியின் அங்கத்தவராக இருந்தமையினாலேயே அவரை இந்த அதிர்ஷ்டம் வந்து அணைத்தது.

ஆகையால் நன்றிக்கடன் மறந்த அந்தக் கட்சியைக் கடைசி நேரத்தில் கைவிட்டு விடக் கூடாது என்ற முடிவுக்கு விஜேதுங்கா வந்திருக்க வேண்டும். மேலே ஏறிய ஏணியை தள்ளி விடக்கூடாது என்றும் அவர் நினைத்திருக்கலாம்.

அதனைவிட மற்றுமொரு உள்நோக்கமும் இவர்பாலுள்ளவர்களுக்கு உதிப்பதற்குச் சாத்தியம் உண்டு. காமினி 'நம்மட ஆள்''; எப்படியும் அவருக்கு உதவ வேண்டும் என்று விஜேதுங்கா தீர்மானித்திருக்கலாம். அதனால் சந்திரிகாவின் செல்வாக்கை வளர்க்க வல்ல காரியங்களை தடுப்பதனையே உகந்த வழியாகத் தேர்ந்தெடுத்திருப்பார் போலும்!

காணாமற் போனவர்களைப் பற்றிய விசாரணை ஆணைக்குழு நியமிப்பதற்கு இணங்க (ஒப்பமிட) மறுத்தமை, புதிய நாணயங்களை வெளிவரவு செய்வதற்கு பிரதமர் விதித்த தடையைச் செல்லுபடியற்றதாக்கி அறிவை வாங்க அனுமதி கொடுத்தமை, வடமாகாணத்து மின்சாரம் வழங்குவதற்குத் தேவையான பொருள்களைக் கொள்முதல் அனுமதி வழங்காமை என்று விஜேதுங்கா ''நானும் ஒருவன் இருக்கிறேன்'' என்று செயற்பட்டு தனக்கு காட்டி வருகிறார்! இதனைத் தடுப்பது கடினம்!

பாதுகாப்பு அமைச்சு அனுமதித்தால்

# சுழற்சி முறையில் மின்வழங்க மின்சாரசபையினர் திட்டம்

## வடபிராந்திய பொதுமுகாமையாளர் தகவல்

யாழ்ப்பாணத்துக்கு மின்சாரம் வழங்குவதற்குத் தேவையான உபகரணங்களை எடுத்துவர பாதுகாப்பு விமானக் அனுமதி வழங்கும் பட்சத்தில் — ஜெனரேட்டர்கள் மூலம் சுழற்சி முறையில் மின்சாரம் வழங்க மின்சார சபை முடிவு செய்துள்ளது

மின்சார சபை வடபிராந்திய பொது முகாமையாளர் திரு. வி. ராஜேந்திரன் இவ்வாறு தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் உள்ள ''டிரான்ஸ்பேமர்கள்'' எல்லாமே பழுதடைந்துள்ளன என்றும்—

உடனடியாக அவற்றைத் திருத்துவது என்பது சாத்தியமான விடயமாக இல்லை என்றும்— அவர் தெரிவித்தார்.

ஐந்நூறு கே. வி. வலுவுள்ள 2 ஜெனரேட்டர்களையும், 250 கே. வி. வலுவுள்ள 3 ஜெனரேட்டர்களையும்கொழும்பில் இருந்து கொண்டு வர நடவடிக்கை எடுக்கப்படும்.

அந்த ஐந்து ஜெனரேட்டர்கள் மூலம் முதலாவதாக ஐந்து ''டிரான்ஸ் பேமர்கள்'' உள்ள பிரதேசங்களுக்கு சுழற்சி முறையில் மின் வழங்க முடியும்.

யாழ், மாவட்டத்திலுள்ள சுமார் 175 ட்ரான்ஸ்பேமர் பிரிவுக்கும் சுழற்சி முறையில் மின் வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது என்றும் அவர் கூறினார்.

ஜெனரேட்டர்களைவடக்கே எடுத்து வர பாதுகாப்பு அமைச்சு அனுமதி வழங்கும் பட்சத்தில் அவை இங்குவந்து சேர்ந்தஇரு வாரகாலத்தினுள் மின் விநியோகத்தின் முதல் கட்டத்தைதுவக்க முடியும் என்றும் அவர் நம்பிக்கை வெளியிட்டார்.

இதற்கு முன்னோடி நடவடிக்கையாக வாழ் மாவட்டத்தில் ''டிரான்ஸ் பேமர்'' கள் உள்ள பகுதிகளை மின் விநியோகத்துக்குத் தாயார் செய்யுமாறு இங்குள்ள அதிகாரிகளை அவர் பணித்துள்ளார். (ஐ-3)

# மாகாண பொலீஸ் சேவை; அரசு விரைவில் முடிவு செய்யும்

## சட்டமா அதிபர் திணைக்களம் தகவல்

கொழும்பு, செப். 23

மாகாண சபைகளுக்கு பொலீஸ் அதிகாரங்களை வழங்குவது பற்றி கொள்கை ரீதியான முடிவு ஒன்றை பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசாங்கம் விரைவில் எடுக்கவிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சட்டமா அதிபர் திணைக்களத்தின் பேச்சாளர் ஒருவரை மேற்கோள்காட்டி அரசுக் கட்டுப்பாட்டுக் உள்ள டெய்லி நியூஸ் பத்திரிகை இக்கருத்தை வெளியிட்டிருக்கிறது:

தனியான மாகாண பொலீஸ் சேவை அமைக்கும் அதிகாரம் மாகாண சபைகளுக்கு வழங்கப்பட வேண்டும் என்றால் மத்திய மாகாணசபையும் சப்ரகமுவ மாகாண சபையும் கோரிக்கை விடுத்திருப்பதை அடுத்து, அரசு விரைவில் இது பற்றி கொள்கை ரீதியான தீர்மானம் ஒன்றை எடுக்கவிருக்கிறது.

மாகாண சபைகள் சட்டத்தின் கீழ் பொலீஸ் ஆணைக்குழு நிறுவும் சட்டம் 1990 ஆம் ஆண்டில் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது.

மாகாணசபைகளுக்கு வழங்கப்படவுள்ள பொலீஸ் அதிகாரங்கள், செயல்பாடுகள், பற்றி இச்சட்டத்தில் விளக்கிக் கப்பட்டுள்ளது.

இச்சட்டம் நிறைவேற்றப் பட்டிருந்தும், இதனை அரசு இன்னும் அமுலுக்குக் கொண்டு வரவில்லை. எனினும் பொலீஸ் ஆணைக் குழுவை நிறுவாமல் மாகாண சபைகளுக்கு பொலீஸ் அதிகாரங்களை வழங்குவது அரசமைப்புக்கு முரணானது என்று சட்டமா அதிபர் திணைக்களப் பேச்சாளர் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட பொலீஸ் ஆணைக்குழுச் சட்டத்தின் படி, தற்போதுள்ள பொலீஸ் சேவை மூன்றாகப் பிரிக்கப் படவேண்டும். ஒன்று, தேசிய பொலீஸ்படை. இரண்டாவது மாகாணப் பொலீஸ்படை. மூன்றாவதுமெட்ரோபொலிற்றன் பொலீஸ்படை.

மெட்ரோபொலிற்றன் பொலீஸ்படை கொழும்புக்கும், ஸ்ரீ ஜெயவர்த்தனபுரவுக்கும் பொறுப்பாகவிருக்கும்.

பொலீஸ் ஆணைக்குழுச் சட்டத்தை அரசாங்கம் அமுலுக்குக் கொண்டுவரும் வரை மாகாண சபைகளுக்கு பொலீஸ் அதிகாரங்கள் வழங்கப்படமாட்டா என்றும் அப்பேச்சாளர் தெரிவித்தார்.

பொலீஸ் ஆணைக்குழுச் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட ஆரம்பித்ததும், அதனால் ஏற்படும் பாரிய மாற்றங்களைச் சந்திக்க கூடிய நாக பொலீஸ் சேவையின் புதிய கட்டமைப்பைத் திட்டமிடவேண்டும் என்றும் அவர் கூறினார்.

# மூழ்கிய பின்னரும் கப்பலில் தொங்கிக் கொண்டிருந்தேன்

## உயிர் தப்பிய கடற்படை சிப்பாய் தெரிவிப்பு

கொழும்பு, செப். 23

இரவு 11-30 மணியளவில் கட்டிலில் ஒன்றில் உறங்கிக் கொண்டிருந்த போது பெரும் வெடிச்சத்தம் கேட்டது. நான் கட்டிலிலிருந்து கீழே விழுந்தேன் பின்னர் எழுந்து பார்த்த போது கப்பலின் பின் பகுதி தகர்க்கப்பட்டிருந்தது.

விடுதலைப் புலிகளால் தகர்க்கப்பட்ட ''சாகர வர்த்தன'' கப்பலில் இருந்து மீட்கப்பட்டு அனுராதபுரம் ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வரும் கடற்படைச் சிப்பாய் ஒருவர் ''தினமின'' பத்திரிகைக்கு இவ்வாறு தெரிவித்துள்ளார்.

தனக்கு நேர்ந்த அனுபவம் பற்றி அவர் மேலும் கூறியதாவது:-

என்னுடன் சுமார் 40 கடற்படையினர் சம்பவம் நடந்த போது கப்பலில் இருந்தனர். பாதுகாப்பு ரோந்துப் பணியில் ஈடுபட்டுக் கொண்டிருந்த போதே புலிகள் கப்பலை தாக்கினர். முதல் வெடிகுண்டுத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்ட பின் பல படகுகளில் வந்த புலிகள் கப்பலை சுற்றி வளைத்தனர்; அப்போது கப்பலில் இருந்த கடற்படையினருடன் துப்பாக்கி மோதல் ஏற்பட்டது. அதனை அடுத்து இரண்டாவது குண்டு நிரப்பப்பட்ட படகு கப்பலில் நடுப்பகுதியில் மோதி வெடித்தது.

அப்போது கப்பல் முழுமையாக சேதமடைந்து கடலில் மூழ்கியது. எனது என்னப்படி கப்பலில் இருந்த 18 பேர் வரை உயிர் தப்பியிருக்கக் கூடும் ஏனைய அனைவரும் இறந்திருக்கலாம். கப்பல் மூழ்கிய பின்னரும் நான் கப்பலின் ஒரு பகுதியை பிடித்தபடி தொங்கிக் கொண்டிருந்தேன்.

எமக்கு ஹெலி ஒன்று பாதுகாப்பு வழங்கியது. எம்மில் சிலர் தம்மை காப்பாற்றுவதற்காக நீந்தத் தொடங்கினர். பின்னர் காலை 10-30 மணியளவில் நாம் ஹெலி மூலம் அனுராதபுரம் ஆஸ்பத்திரிக்கு கொண்டுவரப்பட்டோம். — என்றார்.

தமிழீழ நிர்வாக சேவையில்

# பொது அமைப்புக்களைப் பதிவு செய்யுமாறு கோரிக்கை

சனசமூக நிலையங்கள், கிராம அபிவிருத்திச் சங்கங்கள், மாதர் கிராம அபிவிருத்திச் சங்கங்கள் போன்ற பொது அமைப்புக்கள் எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் பத்தாம் திகதிக்கு முன்பாக தமிழீழ நிர்வாக சேவையில் பதிவுசெய்து சான்றிதழ்களைப் பெற்றுக் கொள்ளும்படி தமிழீழ நிர்வாக சேவையினர் கோரியுள்ளனர்.

இது குறித்து வெளியிடப்பட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது;

எமது பிரதேசத்தில் உள்ள சனசமூக நிலையங்கள், கிராம அபிவிருத்திச் சங்கங்கள், மாதர் கிராம அபிவிருத்தி சங்கங்கள் முதலியன கிராமிய சமூக மட்டங்களில் சமூக, பொருளாதார அபிவிருத்திக்கும் சமூகங்களிடையே நல்லுறவையும், நற்நடவடிக்கையையும் பேணி ஆரோக்கியமான சமுதாயத்தை வளர்த்தெடுப்பதற்காகவும் உருவாக்கப்பட்டவையாகும்.

கடந்த காலங்களில் இவ்வமைப்புகளுக்கான வழி நடத்தல்களையும், கண்காணிப்புக்களையும் மேற்கொண்டிருந்த நிர்வாகங்கள், அவ்வமைப்புக்கள் தமது உண்மையான நோக்கங்களை வென்றெடுக்கும் வகையில் செயற்படவில்லை

அண்மைக் காலமாக இப்பொது அமைப்புக்கள் பற்றிய தொடர்புமுறைகளும் அறிவுறுத்தல்களும் அவை மத்தியில் குழப்பமான நிலைமை யை உருவாக்கியுள்ளன. மேலும் இயற்கையாக மக்களின் நாட்டம் வெகுவாக குறைந்துவருகிறது பெரும்பாலான அமைப்புக்கள் ஒரே நிர்வாகத்தின் கீழ்தொடர்ந்து பல காலம் இருந்துவரும் நிலைமை அவதானிக்கப்பட்டுள்ளது. அத்துடன் அவற்றின் சொத்துக்கள், பல இலட்சம் ரூபா வரையிலான நிதிக் கையாள்கை போன்றவைகூட அவ்வந்த வழிகாட்டும்/கட்டுப்படுத்தும் அமைப்பின் பொறுப்பிலும் இல்லாது தன்னிச்சையான நடைமுறை பின்பற்றப்பட்டு வருகின்றது.

குலைந்து போகும் அல்லது நோக்கம் தவறி செயற்படும் இவ்வமைப்புக்களை மறுசீரமைத்து எம் மக்கள் சமூகத்தின் அவசிய, அடிமட்ட தேவைகளை வெற்றிகொள்ளத் தக்க வலுமிக்க வழிகாட்டிகளாக மாற்றியமைக்க வேண்டிய தேவையை தமிழீழ நிர்வாகசேவை உணர்ந்துள்ளது.

இந்த நடவடிக்கையின் முதற் கட்டமாக —

★ கிராம அபிவிருத்தி சங்கங்கள்.

★ மாதர் கிராம அபிவிருத்திச்சங்கங்கள்.

★ சனசமூக நிலையங்கள்.

★ தொழிற் சங்கங்கள்;

★ விளையாட்டுக் கழகங்கள்

★ இந்து மன்றங்கள்;

★ இளைஞர் கழகங்கள் முதலான வகையான அமைப்புக்களின் பதிவு எதிர்வரும் 10-10-1994 திகதி மாலை 2-00 மணிக்கு முன்பாக தமிழீழ நிர்வாக சேவையில் பதிவு செய்து சான்றிதழ்களைப் பெற்றுக் கொள்ளுமாறு அவசியமானது இச்சான்றிதழ்கள் தமிழீழ நிர்வாக எல்லைப் பரப்பில் எந்த ஒவ்வொரு விடயத்திலும் குறித்த அமைப்பை உறுதிப்படுத்தும் அதியுயர் வலுக்கொண்ட ஆவணமாக இருக்கும்.

எதிர்வரும் 27 - 09 - 1994 முதல் தமிழீழ நிர்வாக சேவை அலுவலகத்தில் காலை 8-00 மணி முதல் பி. பகல் 2 - 00 மணிவரை பொருத்தமான படிவங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

குறிப்பு:

★ படிவங்கள் பெற வருவோர் தாம் சார்ந்த பொது நல அமைப்பின் தற்போதைய நிர்வாகத்தில் உறுதிப்படுத்தப்பட்ட ஆணம் அல்லது விண்ணப்பத்தை சமர்ப்பிப்பதன் மூலம் தங்கள் உறுதிப்படுத்தலாம்.

★ மேற்படி நிறுவனங்களுக்கு தூய தமிழ் பெயர்களும், நோக்கங்கள் கருதிய பெயர்களும் சூட்டப்படவிருக்கிறது;

★ பதிவு செய்யும்போது சான்றிதழுடன் யாப்பு விதிகளும் வழங்கப்படும்.

★ பதிவு செய்யப்படாத எந்த அமைப்பும் வலுவிழந்த தாக கருதப்படும்.

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி; பதிவாளர், தமிழீழ நிர்வாக சேவை, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

## கருத்தரங்கு

யாழ்ப்பாணம், செப். 23

கரவெட்டி ஞானாசிரியர் கல்லூரி உயர்தர வகுப்பு மாணவருக்கான கருத்தரங்கு இன்று பி.ப 2 மணிக்கு நடைபெறுகிறது.

கருத்தித்தறை ஸ்ரீ ராம கிருஷ்ண சாரதா சேவாச் சிரமத்தின் ஆதரவில் ''நவீன உலகில் ஆத்மீகமுறிவிஞ்ஞானமும்'' என்ற பொருளில் நடைபெறும்இக்கருத்தரங்கில் சுவாமி சித்ரூபானந்தா பிரதான உரை நிகழ்த்துவார். கல்லூரி அதிபர் திரு சோ. சிவசிதம்பரம் தலைமை வகிப்பார். (அ)

## புலிகளின் குரல் வானொலியில்

23 — 09 — 1994
வெள்ளி இரவு

★ 8-01 — தியாகதீபம் லெப்டினன்ட் கேணல் திலீபனின் 7ஆம் ஆண்டு நினைவாக சிறப்பு நிகழ்ச்சி — ஈழநாதன் குழுவினர் தயாரித்து வழங்கும் ''தியாகதீபம் திலீபன்'' விவரணச்சித்திரம்

★ 8-10 — லெப்டினன்ட் கேணல் சத்திரன் நினைவாக சிறப்பு நிகழ்ச்சி — க. கிரிசா எழுதிய ''வன்னிக்கு வளம் சேர்த்தவன்''

8-30 — செய்திகள்

★ 8-40 —கறிபிட்டிக் கடற்பரப்பில் போர்க்கப்பல் தகர்க்கப்பட்ட வீரச் சாதனையை பொறுப்பு சிறப்பு நிகழ்ச்சி

24 — 09 — 1994
சனி காலை

★ 7-02—மாவீர வணக்கம்

★ 7-15 — நீங்கள் கேட்டவை

★ 7-30—செய்திகள்

★ 7-35—பத்திரிகைச் செய்திகள்

★ 7-40 — தியாகதீபம் லெப்டினன்ட் கேணல் திலீபனின் 7 ஆம் ஆண்டு நினைவாக சிறப்பு நிகழ்ச்சி — குமேதரன் எழுதிய ''தமிழீழப் பயணத்தில் திலீபன்''

## தற்கொலை செய்ய முயன்ற சுவிஸ் வாலிபர் குதித்து தமிழ் இளைஞர் மரணம்

### லூசேன் நகரில் பரிதாப சம்பவம்

லூசேன், செப். 23

பத்து மீற்றர் உயரத்தில் இருந்த மேடை குதித்து தற்கொலை செய்து கொள்ள முயற்சி செய்த சுவிஸ் வாலிபர் ஒருவர் அவ் வழியே சென்ற தமிழ் இளைஞர் ஒருவர் மீது விழுந்தார். இதனால் பிரதாப தமிழ் இளைஞர் படுகாயமடைந்து ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுப் பின் அதிகு மரணமானார்.

இச் சம்பவம் கடந்த ஞாயிறன்று சுவிஸில் உள்ள லூசேன் நகரில் நடந்துள்ளது.

தற்கொலை செய்து கொள்ள முயற்சித்த 17 வயதான கவிஸ் பிரஜை காயம் எதுவுமின்றித் தப்பிவிட்டார் என்த தெரிவிக்கப்படுகிறது.

தனது நண்பர்களுடன் விதி வழியே நடந்து சென்று கொண்டிருந்த கரவெட்டியைச் சேர்ந்த ஆறுமுகம் அருள்மோகன் என்ற தமிழ் இளைஞரே இச் சம்பவத்தில் பரிதாபகரமான முறையில் உயிரிழந்தார். (ஐ)

## இன்று நடைபெறவுள்ள உண்ணாவிரத நிகழ்வுகள்

கொழும்பு, செப். 23

தியாகி திலீபனின் 7ஆம் ஆண்டு நினைவாக இன்று நடைபெறவுள்ள உண்ணாவிரத நிகழ்வுகளில் பங்குபற்றவுள்ள அமைப்புக்களின் விவரம் வருமாறு:

★ மற்றிகை அம்மன் கோயிலடியில் — இளவிசை போக்குவரத்துச் சபை பருத்தித்துறைச்சாலை;

★ துன்னாலை கலைமகள் சந்தசுவாமி கோயிலடியில் — தேவராயாவி இந்துக் கல்லூரி, அரசடி அ. த. க. பாடசாலை.

★ உடுப்பிட்டி நாவலடி வைரவர் கோயிலடியில் — சர்வோதயம், முதலைக்குழி இளங்கோ ச. ச. நிலையம், முருகமூர்த்தி ச. ச. நிலையம், சோமுங்கன் ச. ச. நிலையம், மாமாவி ச. ச. நிலையம், வல்வெட்டி இ. த. க. பாடசாலை.

★ நல்லூர் சந்தசுவாமி கோயிலடியில் — தனியார் போக்குவரத்து சேவைகளின் ஒன்றியம்.

★ கன்னாகம் சிவன் கோயிலடியில் — ஏழாலை கலைமகள் ச. ச. நிலையம், நிலாவரை ச. ச. நிலையம், டெனின் ச. ச. நிலையம்.

★ சங்கானை வடக்கம்பரை அம்மன் கோயிலடியில் — சுழிபுரம் சிற்றூர் மக்கள்.

★ ஆனைக்கோட்டை முத்த விநாயகர் கோயிலடியில் — மானிப்பாய் வர்த்தக சங்கம், நாவலி சிற்றூர் மக்கள்.

★ நீர்வேலி சந்தசுவாமி கோயிலடியில் — புத்தூர் மெ. மி. த. க. பாடசாலை, அந்நகவேலி மகாவித்தியாலயம், சரவணபவ வித்தியாலயம், ஸ்ரீ விபுலி வித்தியாலயம், முரளி வதனன் நிலையம், உற்பத்திக்குழு, ஆவரங்கால் ச. ச. நிலையங்கள்.

★ நீவகம் கோயிலடி — சரவணை நாரேஸ்வரி வித்தியாலயம், புங்குடுதீவு சித்திவிநாயகர் வித்தியாலயம், புங்குடுதீவு மகாமாரியம்மன் வித்தியாலயம், மயூரன் குடியிருப்பு.

★ வைதீச்சுர வித்தியில் — ஸ்ரீ முருகன் ச. ச. நிலையம், வைத்தீஸ்வரன் ச. ச. நிலையம்.

★ சாவகச்சேரி மணிகுணரப் பிள்ளையார் கோயிலடியில் — மட்டுவில், நுணாவில், கல்வயல் நுணாவில் வகுப்புத் தொழிலாளர் சங்கம்.

★ கொடிகாமம் ரயில் நிலையத்தடியில் — வடமராட்சி சிமிண்ட் அம்மன் கோயிலடி செல்வர் ச. ச. நிலையம்.

★ மல்லாகம் இரட்டைக்கேணி அம்மன் கோயிலடியில் — தர்மக்கேணி மக்கள், வாகன சங்கம். (ஐ)

## நான்கு நிமிடங்கள் மட்டும் நடந்த நாடாளுமன்ற அமர்வு

கொழும்பு, செப். 23

நாடாளுமன்றம் கடந்த செவ்வாய்க்கிழமை கூடிய போது அதன் அமர்வு நான்கு நிமிடங்கள் மட்டுமே நீடித்தது

பிரதமர் சந்திரிகா தமது அரசின் செயற் திட்டம் பற்றிய முக்கிய அறிக்கை ஒன்றை அப்போது வெளியிடவிருந்தார்.

ஆனால் பிரதமர்சபைக்கு சமூகமளிக்க முடியாமற் போகவே நாடாளுமன்றம் மறுநாளுக்கு ஒத்திவைக்கப் பட்டது.

பிரதமர் தமது செயற் திட்ட அறிக்கையில்— இனப் பிரச்சினைக்கு தீர்வு காண எடுக்கப்படும் நடவடிக்கைக்கு முக்கியத்துவம் அளித்திருந்தார் என்று தெரிவிக்கப்பட்டது.

உத்தேச பொருளாதார, ஆயிரு த்திட்டங்கள், லஞ்சம் மற்றும் ஊழல் நடவடிக்கைகளைத் தடுப்பது, நிறைவேற்று ஜனாதிபதி முறையை ஒழிப்பது போன்ற அம்சங்களும் அந்த அறிக்கையில் இடம்பெற்றிருந்தன.

ஆனால் அந்த அறிக்கை நாடாளுமன்றத்தில் இன்னும் சமர்ப்பிக்கப்படவில்லை. (எ—6)

கப்பல் தகர்க்கப்பட்ட போது

## மன்னார்த் தீவில் இருந்த படையினருக்கு தெரிந்ததாம்!

கொழும்பு, செப். 23

கறிபிட்டிக் கடலில் கடந்த திங்கள் நள்ளிரவு கடற்படைக் கப்பல் மீது கரும்புலிகள் நடத்திய பயங்கரத் தாக்குதலை மன்னார் தீவில் நிலை கொண்டுள்ள படையினர் பார்க்கக் கூடியதாக இருந்தது என்று தெரிவிக்கப்படுகிறது.

[மன்னாரில் உள்ள ஐந்தாவது இராணுவப் படையணியின் இராணுவ நிலைகள் மீது தாக்கி விடுதலைப் புலிகள் தாக்குதலை நடத்துவதாக முதலில் எண்ணினர் என்று தெரிவிக்கப்படுகிறது;

கடற்படைக் கப்பல் ''சாகர வர்த்தன'' மீது தாக்கி விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்துவதாகப் பின்னர் தெரியவந்ததும் அனுராதபுரத்தில் உள்ள இரண்டாவது இராணுவ டிவிஷனின் தலைமையகத்துக்கு [மன்னாரில் இருந்து ஐந்தாவது படையணி தகவல் அனுப்பியதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

தாக்குதலில் உயிர்தப்பிய கடற்படையினரை மீட்பதற்கு ஹெலிகொப்டர்களை உடனடியாக அனுப்பினவர்களும் படியே அத்தகவலில் தெரிவிக்கப்பட்டிருந்தது

இச்தகவல் கொழும்பு பத்திரிகை ஒன்று வெளியிட்டுள்ளது. [ஐ-எ]

கடற்படைக்கப்பல் தகர்ப்பு

## பெரும் வெடி ஓசை மன்னாருக்கு கேட்டது

### அப்பகுதி மக்கள் தகவல்

''இரவு 11-30 மணியளவில் அதிர்வை ஏற்படுத்தும் பாரிய வெடிச்சத்தம் கேட்டது. அதனைஅடுத்து வேட்டுக்கள் சரமாரியாகத் தீர்க்கப்படும் சத்தங்கள் தொடர்ந்தன. கடல் பரப்பில் ஏதோ விபரீதம் நடந்திருக்கும் என நினைத்தோம்''

கறிபிட்டிகடலில் போர்க்கப்பல் தகர்க்கப்பட்ட சம்பவம் குறித்து மன்னார்தீவில் உள்ள மக்கள் முன்னுக்கு பின் முரணாகவாறு தெரிவித்தாக கொழும்பு நாளிதழ் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

''சில நிமிடநேரங்களின் பின் ஹெலிகள் பறக்கும் சத்தமும் கேட்டது. கடலே ஷெல் அடிச் சத்தங்களும் கேட்டன; விடிந்தபின்னரே கடற்படைக் கப்பல் தாக்கு தலுக்குள்ளானவிவரம் தெரிய வந்தது'' இவ்வாறு அவர்கள் மேலும் கூறியுள்ளனர்.

## கூட்டம்

உடுவில் சுன்னாகம் கோட்ட அதிபர்களுக்கான கூட்டம் இன்று வெள்ளி பிற்பகல் 2.30 மணிக்கு இராமநாதன் கல்லூரி மண்டபத்தில் நடைபெறும் என உடுவில் கல்வி கோட்ட பிரதிக் கல்விப்பணிப் பாளர் அறிவித்துள்ளார். (ஒ)

மரமதை நாட்டி மழையது பொழியும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கணக்காளர் தேவை

திருநெல்வேலியில் இயங்கும் பிரபல வியாபார நிலையத்திற்கு 5 வருடத்திற்குமேல் அனுபவமுள்ள கணக்காளர் தேவை. நேரில் சமுகந்தரவும். சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.
தொடர்பு:
மணியம் வர்த்தக நிலையம்,
பஸாரி வீதி, திருநெல்வேலிச் சந்தி,
திருநெல்வேலி. (33031)

ஆனைக்கோட்டை
## ஸ்ரீ முத்த நயினார் கோயில் முக்கிய அறிவித்தல்

இன்று (23-9-94) வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு தமிழீழ காவல்துறையினரின் பணிப்பின் பேரில் இடம்பெறும் நிர்வாக சபைத் தெரிவுக் கூட்டத்திற்கு ஆனைத்து அடியார்களையும் வந்து கொள்ளுமாறு அன்புடன் வேண்டுகிறோம்.

இணை முகாமையாளர்
(33028)

## தொழில் நுட்பக்கல்லூரி இறுதிப்பரீட்சை 1993 / 94

பின்வரும் பாடநெறிகளுக்கான இறுதிப்பரீட்சை 1994-10-03 திகதி ஆரம்பமாகுமென பரீட்சை ஆணையாளர் அறிவித்துள்ளார். அன்றைய தினம் மு.ப. 8.00 மணிக்கு தங்கள் பகுதித் தலைவரைச் சந்தித்து தமது அனுமதி அட்டைகளை பெற்றுக் கொள்ளவும். மாணவர் தமது பிரவேச அனுமதிச் சீட்டைத் தவறாது கொண்டு வருதல்வேண்டும்.

1. உயர் தேசிய வணிகத் தகுதித் தேர்வு 3 ஆம் வருடம்
2. உயர் தேசிய வணிகத் தகுதித் தேர்வு 4 ஆம் வருடம்
3. உயர் தேசிய கணக்கியல் தகுதித்தேர்வு (புதிய பாடத்திட்டம்) 4 ஆம் வருடம்
4. தேசிய தொழிற் பொறிமுறைத் தகுதித் தேர்வு (Trade Courses)

அதிபர்

தொழில் நுட்பக்கல்லூரி,
பிறவுன் வீதி,
யாழ்ப்பாணம். (தி 9218)

ஓ
ஓம் விநாட் விஸ்வப் பிரம்மனே நம

## முதலாம் ஆண்டு நினைவலைகள்

தோற்றம்: 15 — 04 — 1922
மறைவு: 04 — 10 — 1993

அமரர் சு. சிதம்பரம் ஆச்சாரி

ஆண்டு ஒன்று சென்றும் எம் நெஞ்சை விட்டு அகலா எம் அன்புத் தெய்வத்தின் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கும்
மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.
4, பஸாரி வீதி (யாழ். வீதி),
2 ஆம் ஒழுங்கை,
யாழ்ப்பாணம். (33033)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

அன்னை மடியில்: 01 — 04 — 1954
இறைவன் அடியில்: 24 — 08 — 1994

திருமதி சந்திரவதனி சண்முகானந்தா
(ஆசிரியை, வீமன்காமம் மகாவித்தியாலயம், தெல்லிப்பழை)

அன்பும் பாசமும் நிறைந்து, பண்பின் உறைவிடமாக தாய்க்கு எடுத்துக்காட்டாய் இருந்து, நியர் மறைவால் எம்மை ஆற்றொணாத் துயரில் மூழ்வைத்து மீளாத் துயரில் ஆழ்த்த எங்கள் அன்பு அம்மாவே உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

எமது அம்மாவின் மரணச்செய்தியைக் கேட்டு உடனே வந்து உதவிய அனைவருக்கும், இறுதிச் சடங்கிலபோது நேரில் சமுகமளித்தவர்களுக்கும், அனுதாபச் செய்திகள் அனுப்பியவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

பிரியாவிடை வாடித்துடிக்கும்:
அன்புக் கணவர், மகன் அகிலன், உறவினர்கள்.

"சர்மிலம்"
இலங்கை வங்கி ஒழுங்கை,
சுன்னாகம். [7651]


## திணைக்களத் தலைவர்கள் கலந்துரையாடல்

சகல திணைக்களத் தலைவர்களுக்குமான விசேட கலந்துரையாடல் ஒன்று இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு யாழ்ப்பாணம் நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெறும் என்றும் — கலந்துரையாடலில் சகல திணைக்களத் தலைவர்களையும் கலந்துகொள்ளுமாறும் — தமிழீழ நிர்வாகசேவை உதவிப் பொறுப்பாளர் அறிவித்துள்ளார். (இ)

அடுத்த...
(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

திக் நடைபெறவிருக்கின்றது.

இந்த பரீட்சைகளில் தோற்றும் பரீட்சார்த்திகளுக்கான அனுமதி அட்டைகள் கொழும்பில் இருந்து எடுத்து வரப்பட்டு நேற்று தபாலில் சேர்க்கப்பட்டன. [ஒ-8]

8 ஆவது...
[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

எங்கும் அழகான சிறிய பந்தல்கள் அமைக்கப்பட்டு அவற்றில் திலீபனின் படங்கள் வைக்கப்பட்டு அவற்றின் முன் விளக்கில் அணையாத தீபங்கள் ஏற்றப்பட்டிருந்தன. மக்கள் அதிகாலையில் திலீபனின் படங்களுக்கு மலர்தூவி உண்ணாவிரதத்தை ஆரம்பித்தனர்.

உண்ணாவிரத நிகழ்வுகளின் போது தமிழீழ கலை பண்பாட்டுக்கழக அங்கத்தவர்களின் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன;

வலிகாமம், வடமராட்சி ஆகிய பகுதிகளில் யாழ். கோட்டையின் வடிவமைப்பும் உண்ணாநோன்பு இருக்கும் தியாகி திலீபனின் உருவமும் உள்ளடங்கிய பிரமாண்டமான ஊர்தி மக்கள் அஞ்சலிக்காக ஊர்ந்து சென்றது.

ஊர்தி குறிப்பிட்ட இடங்களில் தரித்து நின்றபோது காவடி ஆட்ட நிகழ்வும் இடம் பெற்றது.

பருத்தித்துறை வல்லிபுரத்தில் மந்திகை ஆஞ்சனேயர் கோவிலடியிலும்—

கரவெட்டி வட்டாரத்தில் கலிகைக் கந்தன் ஆலய முன்றிலிலும்—

உடுப்பிட்டி வடக்கு தெற்கு வைரவர் கோவில் முன்றிலிலும்— ஆகமக்கப்பட்ட விசேட பந்தல்களில் பக்கவேறு சிறப்பு நிகழ்ச்சிகள் இடம் பெற்றன.

(க-13-11-15-17-30-173)

கற்குளத்தில்...
(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ருந்த ப்டையினர் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

இச்சம்பவத்தை அடுத்து கென்றி, டெனர் பண்ணைப் பகுதியில் முகமிட்டுள்ள இராணுவத்தினர் ஷெல் தாக்குதல் மேற்கொண்டனர்.

இதனால் அப்பகுதி மக்கள் பிரதிக்கு உள்ளானார்கள் என்னத் தெரிவிக்கப்பட்டது.

தெரிவுக்குழுவின்...
(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

டிசிவா, ரக்ஷசிரி விக்கிரமநாயகா பெரேனாட் சொய்ஷ. பிரதி அமைச்சர் பேராசிரியர் விஸ்வ வர்ணபால.

குழுக்களின் பிரதித் தலைவர் ரவூப் ஹக்கீம், எதிர்க்கட்சித் தலைவர் காமினி திஸநாயக்க, கே. எஸ். சொக்ஸி, டாக்டர் நீலன் திருச்செல்வம். எஸ். தொண்டமான், டக்ளஸ் தேவானந்தா, ரணில் விக்கிரமசிங்க, உதேபால மென்டிஸ். த. சித்தார்த்தன். எம். கணேஷ், ஏ. எல். எஸ். ஹமீது

தொண்டர்...
[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

இந்தக் குழுவில் சர்வதேச தொண்டர் அமைப்புக்களின் பிரதிநிதிகளும், உள்நாட்டு தொண்டர் அமைப்புக்களின் பிரதிநிதிகளும் அடங்கியுள்ளனர்.

மூன்று தினங்கள் இங்கு தங்கியிருக்கும் இவர்கள் தமது அமைப்புக்கள் இங்கு மேற்கொள்ளும் திட்டங்களை பார்வையிடுவதுடன் புதிய திட்டங்கள் குறித்தும் ஆராய்வார்கள் என்னத் தெரிவிக்கப்பட்டது. (ஒ-3)

பிரபாவுடன்...
[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

மிச்சக்தி அமைச்சரும், பிரதி பாதுகாப்பு அமைச்சருமான அனுருத்த ரத்வத்த நாடாளுமன்றத்தில் மேற்கண்டவாறு கூறினார்.

எதிர்க்கட்சி உறுப்பினரான நிகல் கருணரத்ன எழுப்பிய கேள்வி ஒன்றுக்கு பதில் அளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அரசாங்கத்துக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையில் எதுவுமே இல்லாத நிலையில் அவர் மேலும் தெரிவித்தார். (இ-3)

## அமைச்சரவை தீர்மானம்

### உரமான்யத் திட்டம்

விவசாயிகளின் நன்மை கருதி உரமான்யத் திட்டம் ஒன்றை உடன் செய்வது என்று அமைச்சரவை முடிவு செய்துள்ளது.

நெல் மற்றும் ஏனைய பயிர்களுக்குத் தேவையான உரத்தின் விலைகளைக் குறைக்குமுகமாக 110 கோடி ரூபாவை மான்யமாக வழங்குவதற்கும் அமைச்சரவை முடிவு செய்துள்ளது.

எதிர்வரும் பெரும் போகத்திலிருந்து உரமான்யத் திட்டம் அமுலுக்கு வரும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

### உணவு முத்திரைத் திட்டம் நிதி ஒதுக்கீடு அதிகரிப்பு

உணவு முத்திரைத் திட்டத்துக்கான நிதி ஒதுக்கீட்டை அதிகரிப்பதென அமைச்சரவை தீர்மானித்துள்ளது.

மிகவும் வறிய மக்களுக்கான உணவு முத்திரை விநியோகத் திட்டத்துக்காக 19 கோடி 50 லட்சம் ரூபாவை ஒதுக்கீடுவதென அமைச்சரவை நேற்று முன்தினம் முடிவு செய்தது.

மண்எண்ணெய் விநியோகத்துக்கென 6 கோடி 50 லட்சம் ரூபாவை ஒதுக்குவது என்றும் முடிவாகியது.

பாடசாலை மாணவர்களுக்கான மதிய உணவு முத்திரைக்கென 110 கோடி ரூபா செலவிடப்படும். இவ்வருட வரவு செலவுத் திட்டத்தின் தலை மதிப்பீட்டின் கீழ் இதற்கு 140 கோடி ரூபா வழங்கப்படும்.

நிறைசேரி முற்பணமாக 60 கோடி ரூபாவை உடனடியாக வழங்கும் என அமைச்சரவைப் பேச்சாளர் தர்மசிறி சேனநாயக்கா தெரிவித்தார். [ஒ-ஊ]

### விதை உருளைக்கிழங்கு கப்பலில் வந்து சேரும்

400 மெற்றிக் தொன் விதை உருளைக்கிழங்கை கப்பல் மூலம் யாழ்ப்பாணத்திற்கு

சமாதானத்.....
(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

நிலப்பாடு என்ன? சமாதானத் தீர்வுக்கான முயற்சிகளை அரசு நிறுத்திவிடுமா என்பன போன்ற கேள்விகள் எழுப்பப்பட்டன.

அதற்குப் பதிலளித்த அமைச்சர் தர்மசிறி சேனநாயக்கா தெரிவித்ததாவது:

தாக்குதல் கவலைதருகிறது

கடற்படைக் கப்பல் 'சாகர வர்த்தனா' மீது விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதல் கவலைக்குரியது.

எனினும் அதனைக் காரணம் காட்டி அரசு சமாதான முயற்சியை கைவிடாது.

கடற்படைக் கப்பல் தாக்குதல் குறித்து விசாரணை செய்யும் குழு தனது அறிக்கையை இன்னும் பிரதிப் பாதுகாப்பு அமைச்சரிடம் சமர்ப்பிக்கவில்லை.

அமைதித் தீர்வைக் காணுவதற்காக விடுதலைப் புலிகளுடன் வைத்துக் கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ள சமாதானப் பேச்சு வார்த்தைகள் தொடர்பான முயற்சி தொடரும்.

எதிர்க்கட்சிகளின் ஒத்துழைப்புடன்

சமாதானத்தை ஏற்படுத்துவதற்காக அரசு உறுதிமொழி அளித்துள்ளது. இரண்டாகப் பிரிந்து நின்ற ஒருவரை ஒருவர் கொல்லும் யுத்தத்தை நிறுத்தி இரு தரப்பினரும் ஏற்றுக்கொள்ளத்தக்க வகையில் சமாதானத் திட்டத்தை எதிர்க்கட்சியுடன் இணைந்து ஏற்படுத்துவதற்கு தீவிரமாகச் செயற்படுகிறோம்.

விடுதலைப் புலிகளுக்கும் அரசாங்கத்துக்கும் இடையில் இரு தரப்பினருக்கும் ஏற்ற சமாதானத் திட்டம் ஒன்றை எப்படியும் தயாரித்தே ஆக வேண்டும்.

"கடந்த அரசு தமிழ்ப் போராளிகளை பயங்கரவாதிகளெனத் தெரிவித்து பேச்சுவார்த்தை நடத்தும் கோரிக்கையை நிராகரித்திருந்தது. ஆனால் பிரதமர் சந்திரிகா சமாதானப் பேச்சுவார்த்தை நடத்த வருமாறு தமிழ்க் குழுக்களுக்கு விடுத்த அழைப்பு தொடர்ந்தும் வலுவில் இருக்கும்"—என்றார்.

கிளாலி

யாழ். குடாநாட்டுக்குள் சிக்கியுள்ள தமிழ் மக்கள் இலகுவாக பயணஞ் செய்வதற்காக கிளாலி ஏரியை திறந்து விடுவது பற்றி அரசின் வசமுள்ள கப்பல்கள் ஒரு தரப்பாகவும் அமைச்சர் மற்றொரு தரப்பாகவும் கேள்விக்குப் பதிலளிக்கையில் தெரிவித்தார். [ஒ-ஊ-3-6]

## கட்டுத்துவக்கு வெடித்து காயம்

கட்டுத் துவக்குக்கு வெடி மருந்துநிரப்பிய போது அது வெடித்ததில் ஒருவர் காயமடைந்தசம்பவம் பருத்தித்துறை மக்கேனியில் இடம்பெற்றது.

அந்த இடத்தைச் சேர்ந்த நல்லையா விக்னராசா (வயது 53) என்பவரே காயம் அடைந்தவர் ஆவார்.

சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு பின்னர் யாழ். போதனா வைத்தியசாலைக்கு அவர் கொண்டு செல்லப்பட்டார். [இ-117]

## மரண அறிவித்தல்கள்

### திருமதி கந்தையா பகவதியம்மா

கரும்பராய் தெற்கைச் சேர்ந்த காலம்சென்ற நா. கந்தையாவின் மனைவி பகவதியம்மா காலமாகி விட்டார். இவர் குஞ்சராசன் (கொழும்பு), குலசேகரம் (சேகரம்) ஆகியோரின் தாயார் ஆவார்.

இறுதிச் சடங்குகள் இன்று (23-9-94) பிற்பகல் 3.30 மணிக்கு கரும்பராயில் நடைபெறும்.

தகவல்:
க. சேகரம்
(மகன்)
(33032)

திருமதி
### குலசேகரம்பிள்ளை செல்லம்மா (சிறி)

புங்குடுதீவு 2ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த குலசேகரம்பிள்ளை செல்லம்மா (சிறி) காலமாகிவிட்டார்.

இவர் குலசேகரம்பிள்ளையின் (குலம்) அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான நாகநாதி (ஓடலி), செங்கமலத்தின் அன்பு மகளும், சோதிராணி, மனோன்மணி (நோர்வே), ஜெயராணி, அருள்தாஸ், ஜெயதாஸ், குகதாஸ், அனுசியா ஆகியோரின் அன்புத் தாயாரும், இளங்கோன், கண்ணன் (நோர்வே) ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றி பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:
தே. இளங்கீரன்

43, கிறீன் வீதி,
கனேடியாவில் அருகில்,
கொக்குவில் மேற்கு கொக்குவில். (7918)

### பண்டிதர், செல்லத்துரை சிவலிங்கம்
(முன்னாள் அதிபர் யா/விநாயகர் ம. வி. மீசாலை)

ஊர்காவற்றுறைப் பிறப்பிடமாகவும், மட்டுவில் தெற்கு சாவகச்சேரியை வசிப்பிடமாகவும் கொண்ட பண்டிதர் செல்லத்துரை சிவலிங்கம் காலமானார்.

இவர் சாவகச்சேரி மகளிர் கல்லூரி இணைப்பாளரிய ஆசிரியை சிரமாக்கியத்தின் அன்புக்கணவரும், கிரோதயன் (லண்டன்), சிவகுமாரி (அவுஸ்திரேலியா), சிவபாலன் (பொறியியலாளர் அவுஸ்திரேலியா), Dr. சிவதாஸன் (லண்டன்), சிவநேஸன் (விரிவுரையாளர்— அமெரிக்கா), சிவானந்தன் (விரிவுரையாளர் அமெரிக்கா), ஜெயகுமாரி (சட்டத்தரணி அமெரிக்கா), Dr. சிவேந்திரன் (அமெரிக்கா), பாலுக்குமார் B. Sc ஆகியோரின் பாசமிகு தந்தையாகும், சுபத்திரா (லண்டன்), Dr. சண்முகநாதன் (அவுஸ்திரேலியா), தேவாரகௌரி (அவுஸ்திரேலியா), வசந்தினி (லண்டன்), கௌரி (அமெரிக்கா), இந்துமதி (அமெரிக்கா), தேவபரன் (கணக்காளர் அமெரிக்கா) ஆகியோரின் அன்பு மாமனாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 24-09-94 சனிக்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு கொழும்புத்துறைத் மயானத்தில் நடைபெறும்.

உறவினர்கள், நண்பர்கள் இத்தகவலை ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்;
பொ. தில்லைநாதன்

நுணாவில்,
சாவகச்சேரி. (33029)

### திருமதி விநாயகலிங்கம் சோதியம்மா

இமையாணன் உடுப்பிட்டியை சேர்ந்த காலம்சென்ற விநாயகலிங்கத்தின் மனைவி சோதியம்மா காலமானார்.

இவர் இராமலிங்கம் (இணைப்பாளர் ஆசிரியர்), நெல்லைலிங்கம் (மாவலிஅபிவிருத்திச்சபை கொழும்பு) காலம்சென்ற அருணலிங்கம், தேவி, இரவி ஆகியோரின் அன்புத் தாயாரும் குகதாசன் (C.W.E. திருமலை) சு. திருப்பரங்கிரிநாதன் (தபால் அதிபர் காங்கேசன்துறை), மகேஸ்வரி, சுசீலாதேவி, வசந்தி ஆகியோரின் அன்பு மாமியுமாவார். ஈமக்கிரியைகள் இன்று வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு உடுப்பிட்டியில் நடைபெறும்.

தகவல்:
சு. திருப்பரங்கிரிநாதன்
(33034)

### வேலுச்சாமி செட்டியார்

யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகக் கொண்ட வேலுச்சாமி செட்டியார் 15-9-94 வியாழக்கிழமை இந்தியாவில் காலமாகிவிட்டார் என்பதனை மிகவும் வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
வே. மோகன் (மகன்)
மருமகள், பேரப்பிள்ளைகள்

629, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம். (33035)

### அருளாச்சாமி ஆச்சாரியார்

மாதகலைப் பிறப்பிடமாகக் கொண்ட அருணாசலம் அருளாச்சாமி ஆச்சாரியார் 22-09-94 இல் காலமானார்.

இவர் காலஞ்சென்ற அருணாசலம் தம்பதியினரின் புதல்வரும், மாதமுத்துவின் அன்புக் கணவரும், சிறீராஜினிதேவி, கணேசமூர்த்தி (ஆசிரியர் யாழ்ப்பாணக் கல்லூரி வட்டுக்கோட்டை), ஜெகதீஸ்வரி (ஆசிரியை யா/மாதகல் சென் யோசவ் ம. வி.), கமலமூர்த்தி ஆகியோரின் அன்புத்தந்தையாரும், நாகேஸ்வரன், இராமசாமி [சிங்கப்பூர்] என்பவரது அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று 23-9-94 பி. ப. 1.00 மணியளவில் மாவிப்பாய் இப்பிலி மயானத்தில் நடைபெறும்.

தகவல்:
து. கணேசமூர்த்தி
[மகன்]
சோதி வேம்படி,
மாவிப்பாய் (33036)


## இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் யாழ் கிளை வலி மேற்குப்பரிவு

### இலவச ஆங்கில வகுப்பு

எமது பிரிவினால் 01-10-94 முதல் சிரேஷ்ட ஆங்கில ஆசிரியர் மூலம் இலவசமாக ஆங்கில வகுப்பு நடத்தப்பட இருக்கின்றது. எல்லி பயிலவிரும்பும் வலி-மேற்குப் பிரதேச மாணவர்கள் 29-09-94 ஆம் திகதி காலை 10.00 மணிக்கு தங்கள் அலகுத் தலைவரின் சிபாரிசுக் கடிதத்துடன் நேரில் பதிவு அலுவலகத்திற்கு சமுகமளிக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

பைரவ செயலாளர்
வட்டுக்கோட்டை. (தி-9219)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org